# GODDependence செய்தி மடல்

True freedom is being dependent on God

## மார்ச் | 2026



## எல்லா மனிதருக்கும் தேவையான ஒளி

“அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது, இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.” (யோவான் 1:4-5)

பரிசுத்த வேதாகமத்தில் ஒளி என்ற வார்த்தை மிகவும் வல்லமையான உருவகங்களில் ஒன்றாக பயன்படுத்தபட்டிருக்கிறது. சத்தியம், வழிநடத்துதல், தூய்மை, மற்றும் தேவனுடைய பிரசன்னத்தை குறிப்பதாக ஒளி இருக்கிறது. மறுபக்கத்தில், இருள் என்பது அறியாமை, பாவம், குழப்பம், மற்றும் தேவனை விட்டு பிரிதல் போன்றவற்றை குறிப்பிடுவதாக இருக்கிறது. இந்த இருள் என்பது வெறுமனே அறிவுப்பூர்வமான அறியாமையை மட்டும் குறிப்பிடுவதாக அல்லாமல், மனித இருதயத்தின் நிலையை குறிப்பிடுவதாக இருக்கிறது. மனித வாழ்வில் நிச்சயமற்ற தன்மை, குழப்பங்கள், எதிர்பாராத நிலைகள் போன்றவைகளில் இருளானது பிரதிபலிக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

இப்படிப்பட்ட உலகில், கிறிஸ்துவானவர் ஒளியாக வந்தார். அவருடைய வாழ்க்கை தேவனுடைய குணாதிசயத்தை வெளிப்படுத்துகிறது, அவருடைய போதனைகள் சத்தியத்தை வெளிச்சம் போட்டு காட்டுகிறது மற்றும் அவருடைய தியாக பலியானது மீட்பிற்கான வழியை திறக்கிறது. மனித சமுதாயத்திற்கு மிகவும் அவசியமான ஜீவன் கிறிஸ்துவில் இருக்கிறது. அந்த வாழ்க்கையானது வெறுமனே சரீரப்பிரகாரமாக இங்கே வாழ்வதைக் குறிக்கவில்லை, மாறாக, தேவனுடனான புதுப்பிக்கப்பட உறவில் இருந்து வருகிற பரிபூரண வாழ்க்கையை அது குறிக்கிறது.



தேவனும் பரிசுத்த வேதாகமமுமின்றி முழு உலகத்தையும் சரியாக ஆளுகைச் செய்வது சாத்தியமில்லை. – ஜார்ஜ் வாஷிங்டன்

இந்த உண்மையை கிறிஸ்தவ பணித்தளத்தில் நடைபெற்ற ஒரு உரையாடல் மிகத் தெளிவாக விளக்குகிறது. மிஷனெரி ஒருவரிடம் அவர் ஊழியம் செய்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் இப்படியாக சொன்னார், "ஐயா, நீங்கள் ஒளியை எங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள், ஆனால் அது எங்களுக்குத் தேவையானது என்று நாங்கள் நினைக்கவில்லை என்பது போல காணப்படுகிறது. நீங்கள் ஒளியை எங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள், நாங்களோ இன்னமும் இருளில் நடப்பதையே தெரிவு செய்து வாழ்கிறோம்." அவளுடைய வார்த்தைகள் மனிதனுடைய நிலையைப்பற்றிய மிகவும் வேதனையான ஆனால் நேர்மையான அவதானிப்பை வெளிப்படுத்துகிறது. இங்கே ஒளி இல்லாமல் இருப்பது அல்ல பிரச்சனை. மாறாக, மனிதன் அந்த ஒளியை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதே பிரச்சனையாக இருக்கிறது. நற்செய்தியின் உண்மையானது மிகத் தெளிவாக சொல்லப்பட்டாலும்கூட, மக்கள் இருளையே இறுகப்பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

ஒளிக்கும் இருளுக்கும் இடையே உள்ள போராட்டமானது உலகளாவிய அல்லது சமுதாய பிரச்சனை மட்டுமல்ல, அது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட பிரச்சனை ஆகும். இருளில் வாழ்வதா அல்லது ஒளிக்குள் பிரவேசிப்பதா என்பதை பற்றி ஒவ்வொரு மனிதனும் தீர்மானம் எடுக்கவேண்டும். ஒளியில் நடப்பது என்பது கிறிஸ்துவில் வெளிப்பட்ட சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அவர் நம் இருதயங்களை தமது ஜீவனைக்கொண்டு உருமாற்ற அனுமதித்து, அவருடைய ஒளியை நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடம் பிரதிபலிப்பது ஆகும்.

எனவே, யோவான் 1:4-5 ஒரு சவாலையும் அதே சமயத்தில் நம்பிக்கையையும் நம் முன் வைக்கிறது. ஒளியானது இருளிலே தொடர்ந்து பிரகாசிக்கிறது என்பது நமக்கு முன் இருக்கிற நம்பிக்கை ஆகும். இருளானது எவ்வளவு அந்தகாரமானதாக காரிருளாக இருந்தாலும் அதனால் ஒளியை தடுத்து நிறுத்த முடியாது. நமக்கு முன்பாக இருக்கும் சவால் என்னவெனில், நாம் அந்த ஒளியை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறோமா என்பதுதான். நாம் தொடர்ந்து இருளில் வாழ விரும்புகிறோமா அல்லது கிறிஸ்துவின் ஒளியானது நம் வாழ்க்கையை பிரகாசமாக்க அனுமதிக்கப்போகிறோமா?

அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியம் உள்ளவர்களாக இருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவான் 1:7).

-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.

## வாசகர் வாய்ஸ்

**D. ரேணுகா,** சென்னை. ★★★★★

நான் செப்டம்பர் *2025* முதல் ஒவ்வொரு மாதமும், தவறாமல் *GODependence* செய்திமடல் வாசித்து, புதிர் போட்டிகளிலும் கலந்துகொண்டு வருகிறேன். அப்போது சிறு பிள்ளையாகவே மாறிவிடுவேன். போட்டிக்கான வேதப்பகுதியை திரும்ப திரும்ப வாசித்து விடை கண்டுபிடித்து அனுப்பிவிடுவேன். மடல் மூலம் நிறைய புதிய தகவல்கள் அறிந்து கொள்கிறேன். நன்றி.

**Dr. A. இம்மானுவேல் தங்கராஜன்** தூத்துக்குடி. ★★★★★

வேதாகமத்திலிருந்து கேள்வி பதில்கள், உங்களுக்குத் தெரியுமா? பகுதி போன்றவை மிகவும் பயனுள்ளவை..

இறுதியில், மாற்றப்பட்ட வாழ்க்கையும், இயேசுகிறிஸ்துவுடனான ஆழமான மற்றும் நிலையான உறவுமே தனிப்பட்ட வேத ஆராய்ச்சியின் குறிக்கோள் ஆகும். - கே ஆர்தர்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த ஆண்டில் இரண்டாம் மாதம் முடிவதற்குள் மத்திய கிழக்கு நாடுகளில் ஆரம்பித்துள்ள யுத்தம் தற்போது உலகம் முழுவதையும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்து விட்டது. உலகத்தில் போர்களுக்கான காரணங்களாக அரசியல், நிலம், பாதுகாப்பு அல்லது வரலாற்று விரோதங்கள் என்று பலவற்றை விளக்கினாலும், வேதாகமம் அதற்கான உண்மையான காரணம் மனித இதயங்களின் உள்ளார்ந்த நிலைமையில் இருந்து ஆரம்பிப்பதைக் காண்பிக்கிறது. யாக்கோபு 4:1 கூறுகிறது. "உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது, உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?"

### 1. சண்டைகளின் மறைவான காரணம் – உள்ளத்தில் போராடும் ஆசைகள்

அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுவது போல், தனி மனிதனின் உள்ளான வாழ்க்கையில் சண்டைகளின் மூல காரணம் அவனது உள்ளத்தில் போராடும் ஆசைகளே. பேராசை, பெருமை, பழிவாங்கும் மனம், ஆதிக்கம் செலுத்தும் விருப்பம் போன்றவை தனி மனிதனின் இதயத்தில் எழும்பும்போது, அது மனிதர்களுக்கிடையே மோதல்களை உருவாக்குகிறது. இந்த உள்ளார்ந்த போராட்டங்களை வெல்ல தனி மனிதனுக்கு தேவனுடைய வார்த்தையின் வழிகாட்டுதல் அவசியம். நாம் அனுதினமும் வேதாகமத்தை வாசித்து தியானிக்கும்போது, தேவன் நமது எண்ணங்களையும் ஆசைகளையும் அவருடைய சித்தத்தின்படியாக திருத்தியமைத்து நம்மை உள்ளான அமைதியின் பாதையில் நடத்துகிறார்.

### 2. ஆசைகளின் விரிவு – தனிமனித இதயத்திலிருந்து உலகளாவிய மோதல்களுக்கு

ஒரு மனிதனின் இதயத்தில் ஆரம்பிக்கும் ஆசைகள் கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது குடும்பங்களில், சமுதாயங்களில், பின்னர் நாடுகளுக்கிடையேயும் மோதல்களாக விரிவடைகிறது. தலைவர்களும் மக்களும் தேவனுடைய நீதியும் கருணையும் காட்டும் வழியில் நடக்காதபோது, சிறிய கருத்து வேறுபாடுகளும் பெரிய யுத்தங்களாக மாறுகின்றன. ஆனால் தேவனுடைய வார்த்தை மனிதர்களின் மனப்பான்மையை மாற்றுகிறது. தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமுதாயங்கள் வேதாகமத்தின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு வாழும்போது, சமாதானம் வளரத் தொடங்குகிறது. ஆகையால் வேதாகம வாசிப்பு என்பது தனிப்பட்ட ஆன்மீக பயிற்சி மட்டுமல்ல, அது சமுதாயத்தை மாற்றும் சக்தியுடையதாகும்.

### 3. உண்மையான சமாதானம் – தேவனுடைய வார்த்தையால் மாற்றப்பட்ட இதயங்களில் ஆரம்பம்

உலகத்தில் நிலையான சமாதானம் அரசியல் தீர்வுகளால் மட்டும் வருவதில்லை, அது மாற்றப்பட்ட மனித இதயங்களில் ஆரம்பமாகிறது. தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். தேவனுடைய வார்த்தைகளை முழு மனதுடன் விசுவாசியுங்கள். - லிசா டெர்கர்ஸ்ட்

மனிதனின் ஆசைகளையும் எண்ணங் களையும் மாற்றி, பகையை அன்பாகவும், பெருமையை தாழ்மையாகவும், வன்முறையை சமாதானமாகவும் மாற்றுகிறது. நாம் தினமும் வேதாகமத்தை வாசிக்கும் போது, தேவன் நமது இதயங்களில் செயல்பட்டு நம்மை சமாதானத்தின் கருவிகளாக மாற்றுகிறார். உலகப்போர்களை தனிப்பட்ட முறையில் நாம் நேரடியாக நிறுத்த முடியாவிட்டாலும், தேவனுடைய வார்த்தையால் மாற்றப்பட்ட நமது வாழ்க்கை சமாதானத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தும்.

இப்படியாக உலகில் நடைபெறும் யுத்தங்கள் மனிதகுலத்தின் ஆழமான ஆன்மீக தேவையை நினைவூட்டுகின்றன. மனித இதயங்களில் தேவன் ஆட்சி செய்யாதவரை வெளிப்புற சமாதானம் நிலைத்திருக்க முடியாது. எனவே நமது தனிப்பட்ட வாழ்க்கையில் நடக்கும் “உள்ளான யுத்தத்தை” தேவனுக்கு ஒப்படைத்து, அனுதின வேதவாசிப்பின் மூலம் நமது இதயங்களை தேவன் மாற்ற அனுமதிப்போம். தேவனுடைய வார்த்தை நம்மை மாற்றும்போது, நாமும் இந்த உலகத்தில் சமாதானத்தை வெளிப்படுத்தும் சாட்சிகளாக இருப்போம்.

தற்போது நடைபெறும் யுத்தம் விரைவில் நிறுத்தப்பட்டு, அமைதியும் சமாதானமும் நிலவ ஜெபிப்போம். நமக்கு அன்பானவர்களும் அங்கு பாதுகாப்பாக இருக்க ஜெபிப்போம். போரின் கொடுமையில் சிக்கித் தவிக்கும் மக்களையும் ஜெபத்தில் நினைவு கூருவோம்.

பிப்ரவரி 18ல் ஆரம்பித்த ரமலான் காலத்தில் 30 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் சவால்களில் 271 நபர்களும், 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசித்து லெந்து கால வேதவாசிப்பு சவால்களில் 1406 நபர்களும் இணைந்து பரிசுத்த வேதாகமத்தை வாசித்து வருகின்றனர்.

பிப்ரவரி 14 அன்று நடைபெற்ற ” இருதயம் காப்போம் - டிஜிட்டல் உலகில் எல்லைகள் மற்றும் பரிசுத்தம்” என்ற தலைப்பில் நடைபெற்ற வேதாகமக் கருத்தரங்கில் (Talk Show) அநேகர் கலந்து கொண்டு, பயனுள்ள பல நடைமுறை ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதாக கருத்துக்களைப் பகிர்ந்தனர். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். பிப்ரவரி 28 அன்று தமிழில் நடைபெற்ற ஆறு மணிநேர தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சியிலும் அநேகர் உற்சாகமாக கலந்து கொண்டனர். மாதந்தோறும் இத்தகைய கருத்தரங்குகளும் நேரலை வேதவாசிப்பு நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறவும் அதன் மூலம் அனேகர் பயன் பெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ரமலான் மற்றும் லெந்து கால வேதவாசிப்பு சவால்கள் நிறைவடைந்த பின்னர், வேத தியான குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து செய்யப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்ப ட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மார்ச் 2026 வேத வாசிப்பு சவால்களைத் தொடங்கும்போதும் நமது 3 எண்களும் மீண்டும் வாட்சாப்பில் spam பிரச்சனைகளை சந்தித்தன. தொடர்ந்து 3 எண்களும் spam பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கப்பட, இவற்றில் தேவனுடைய கிருபை விளங்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மாதந்தோறும் வெளிவரும் நமது செய்திமடல்களை நீங்கள் தவறாமல் வாசிப்பீர்கள் என நம்புகிறோம். இந்த செய்தி மடல்கள் மற்றும் அதன் உள்ளடக்கங்கள் குறித்த உங்கள் கருத்துக்களை அவ்வப்போது எங்களுக்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



பரிசுத்த வேதாகமம் வாழ்வதற்கு மிகச் சிறப்பான வழிமுறையையும், பாடுபடுதலின் மேன்மையான வழியையும், மரித்தலின் மிகவும் எளிதான வழியையும் நமக்குப் போதிக்கிறது. - ஃப்ளவல்

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - பிப்ரவரி 2026

## துதிப்போம்:

- 2026 பிப்ரவரி மாதத்தில் தங்களுடைய வேதவாசிப்பை முழுமையாக நிறைவு செய்தவர்களுக்காக.
- 2026 பிப்ரவரி 14 மற்றும் 15-ம் தேதிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் "இருதயம் காப்போம்" என்ற தலைப்பில் சிறப்பாக நடைபெற்ற GODependence கருத்தரங்குகளில் (Talk Show) கலந்துகொண்டு பயன்பெற்றவர்களுக்காக.
- 2026 பிப்ரவரி 18-ம் தேதி ஆரம்பிக்கப்பட்ட ரம்ஜான் மற்றும் லெந்து கால வேதவாசிப்பு சவால் குழுக்களில் அநேகர் இணைந்து, வேதாகமத்தை வாசித்து ஜெபிப்பதற்காக.
- 2025-26 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு குழுக்களில் (CBRC) வேத வாசிப்பை நிறைவு செய்து, வேத வசனங்களை மனனம் செய்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்காக.
- பல சவால்களுக்கு நடுவிலும், 2026 மார்ச் மாத வேதவாசிப்பு குழுக்களை ஆரம்பிக்க ஆண்டவர் அருள்புரிந்ததற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

## ஜெபிப்போம்:

- 2026 மார்ச் மாத வேத வாசிப்பு குழுக்களிலும், ரம்ஜான் மற்றும் லெந்து கால வேத வாசிப்பிலும் இணைந்திருக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய வேத வாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்ய.
- வேத வாசிப்பு சவால்களுக்குப் பயன்படுத்தும் GODependence-ன் 3 வாட்ஸ்அப் எண்களும் ஸ்பேம் பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த 3 எண்களும் ஸ்பேம் பிரச்சனைகளிலிருந்து பாதுகாக்கப்பட, வேதவாசிப்பு சவால்கள் தொடர்ந்து தடையின்றி நடைபெற.
- 12 மற்றும் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். தேர்வு எழுதும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் தேவ ஆசீர்வாதம் உண்டாகவும், இறுதித் தேர்வை எதிர்கொள்ளும் இந்தப் பிள்ளைகளின் வெற்றிக்காகவும் ஜெபத்தில் நினைவுகூருவோம்.
- 2026 மார்ச் மாதத்திற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள GODependence கருத்தரங்கு மற்றும் தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகள் தடையின்றி நடக்க, அவை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம்
- உலக நாடுகளில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக ஜெபிப்போம். விரைவில் போர் நிறுத்தப்பட்டு, அமைதியும் சமாதானமும் நிலவ ஜெபிப்போம். நமக்கு அன்பானவர்களும் அங்கு பாதுகாப்பாக இருக்க ஜெபிப்போம். போரின் கொடுமையில் சிக்கித் தவிக்கும் மக்களையும் ஜெபத்தில் நினைவு கூருவோம்.

பரிசுத்த வேதாகமம் உண்மையா இல்லையா என்பது பெரிய பிரச்சனை அல்ல. அது உங்களில் உண்மையானதாக இருக்கிறதா என்பதுதான் பெரிய பிரச்சனை. - A W டோசர்

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

Grace

### முழக்கம்: 3. கிருபை மட்டுமே! (Grace alone!)

“கிரியைகளா, விசுவாசமா” என்பதனை முந்திய முழக்கத்தின்கீழ் கவனித்தோம். “நியாயப்பிரமாணமா, கிருபையா” என்பதனை இப்பொழுது பார்ப்போம்.

நியாயப்பிரமாணம், கிருபை ஆகிய இரண்டையும் பைபிள் தெளிவாய் வேறுபடுத்திக் காட்டுகிறது. யோவான் 1:17இல் துவங்குவோம்: “நியாயப்பிரமாணம் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமுமோ இயேசுகிறிஸ்து மூலம் உண்டாயின.” நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தின் கீழிருந்த யூதருக்கு இயேசு கொடுத்த அழைப்பில் இது தெளிவு: மத்தேயு 11:28&30, “வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே, என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது.” பாவத்தின் பாரத்தை அல்ல, நியாயப்பிரமாணத்தின் “நுகத்தையே” இயேசு இங்கு குறிப்பிடுகிறாரென்பது தெளிவு. தமது நுகத்தையும் நியாயப்பிரமாணத்தின் சுமையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். “நுகம், பாரம்” போன்ற சொற்கள் புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் இந்த அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன (லூக்கா 11:46, அப்போஸ்தலர் 15:10, கலாத்தியர் 5:1).

நாம் நீதிமானாக்கப்படுதல் என்பது நம்மைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க விசுவாசத்தினால் மட்டுமே, தேவனைப் பொறுத்தவரை முழுக்க முழுக்கக் கிருபையினால் மட்டுமே. ரோமர் 3:23,24, “எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவரது கிருபையினால் கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.” இரட்சிப்பு என்பது தேவ கிருபையினால் நமக்குக் கிடைக்கும் அவரது “ஈவு” (எபேசியர் 2:8,9). அது ஒரு “பரிசு” அல்ல, அது ஒர் “ஈவு!” (Not an award or a reward or a prize, but a gift). ஈவு என்பதைச் சம்பாதிக்கவோ, அதற்காய்த் தகுதிபெறவோ முடியாது. பிரசங்கிகளின் வேந்தன் C.H. ஸ்பர்ஜன் கூறியது: “இரட்சிப்பு முழுக்க முழுக்க தேவனது கிருபையினால் ஆனது, ஆக்கினைத் தீர்ப்பு முழுக்க முழுக்க மனிதனது விருப்பத்தினால் ஆவது!” விசுவாசிக்க மறுக்கும் மனித சித்தமே அவனை நித்திய நரகத்திற்குள் தள்ளிவிடும்.

நான் பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன். நான் இருக்கும் இடத்திலேயே அது என்னைக் கண்டுபிடிப்பதால், இது தேவனுடைய வார்த்தை என்று நான் நம்புகிறேன். - ஆபிரகாம் லிங்கன்

தேவனது ''கிருபையின் ஐசுவரியத்தினாலேயே'' நமக்குப் பாவ மன்னிப்பு உண்டாகிறது (எபேசியர் 1:7). நமது பாவங்கள் ''எண்ணிலடங்காதவையாய்'' இருக்கலாம், ஆனால் ''அளவிட முடியாத'' தேவ கிருபையின் ''ஐசுவரியம்'' அவற்றைக் கவனித்துக்கொள்ளும்! இதைத்தான் மார்ட்டின் லூத்தர் ஒங்கியடித்தார். ஆலயக் கட்டுமானப் பணிக்குச் சீட்டுகளை விற்று அதன் மூலம் பாவ மன்னிப்பு பெறலாம் என்ற போப்பின் வாக்குறுதிக்கு எதிராய்க் குரலெழுப்பினார். அப்போஸ்தலன் பவுல் தேவ கிருபையை எவ்வளவு கொண்டாடினார் பாருங்கள்: 1 தீமோத்தேயு 1:14,15, ''பாவிகளில் பிரதான பாவி நான், ஆனால் கர்த்தரின் கிருபை என்னிடம் பரிபூரணமாய்ப் பெருகிற்று!'' பவுலின் காலம் போற்றும் அறிக்கை நமது ஆவியை உற்சாகப்படுத்தி எழுப்பிவிடுகிறது: ''நான் இருப்பது தேவ கிருபையினாலேயே'' (1 கொரிந்தியர் 15:10). எனவே, இரட்சிக்கப்பட்ட நண்பரே, இரட்சிக்கப்படாதோரை அற்பமாய் எண்ணாதீர். தெருக்களில் காவலதிகாரிகளால் இழுத்துச்செல்லப்பட்ட குடிகாரன் ஒருவனைச் சுட்டிக்காட்டி ஜான் வெஸ்லி சொன்னது: ''தேவ கிருபை மட்டும் இல்லாதிருந்தால் அதுதான் ஜான் வெஸ்லி!'' கிருபையின் உடன்படிக்கையின் கீழ் இருக்கும் நமக்கு ''மூதாதையர் பாவம்'' (generational sin) என்பதும் கிடையாது (எசேக்கியேல் 18:1&4, மாற்கு 10:13,14).

நமது வாழ்க்கை மட்டுமல்ல, நமது ஊழியமும் தேவ கிருபையினாலேயே ஆளப்படவேண்டும். தனது ஊழியத்தை ஓர் ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிட்டுத், தனது செய்தியைத் ''தேவனது கிருபையின் சுவிசேஷம்'' என்றழைத்தார் பவுல் (அப்போஸ்தலர் 20:24). ''மற்ற எல்லா அப்போஸ்தலரையும்விட நான் அதிகம் பிரயாசப்பட்டேன்'' என்ற அவர், ''ஆனாலும் நான் அல்ல, எனக்குள் இருக்கும் தேவ கிருபையே அப்படிச் செய்தது'' என்றும் அறிக்கையிட்டார் (1 கொரிந்தியர் 15:10). பெருமையடித்துக்கொள்ள இடமேயில்லை! பணியாற்றுவதற்காய்த் தேவன் தரும் ஏதுக்களைப் பவுலடியார் ''கிருபை வரங்கள்'' என்றழைத்தார் (ரோமர் 12:6). செருபாபேலுக்கு முன்னிருந்த வேலை இமயம் போன்றது. அவன் கட்டிட வல்லுனன்தான். அவன் கையிலிருந்த தூக்குநூல் தேவனது கண்களுக்குப் பிரியமாயிருந்தன. ஆனாலும் அப்பணியானது முடிக்கப்பெறுவது தேவ கிருபையினால் மட்டுமே: ''தலைக்கல்லை செருபாபேல் கொண்டு வருவான், அதற்குக் கிருபை உண்டாவதாக, கிருபை உண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்'' என்றார் தேவன் (சகரியா 4:7).

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய "நான் நிற்கும் கன்மலை" என்ற நூலில் இருந்து)**

தேவனின் சித்தத்தை அறிய, நமக்கு ஒரு திறந்த வேதாகமம் மற்றும் திறந்த உலக வரைபடம் தேவை. - வில்லியம் கேரி

# 🌸 பெண்கள் தின வாழ்த்துகள்.🌸

- பெண் ஒரு மனிதர் மட்டும் அல்ல,
- ஒரு தலைமுறையின் முதல் ஆசிரியர்.
- வரலாற்றின் இருள் காலங்களில்
- பெண்களின் கல்வி மறுக்கப்பட்டது.
- ஆனால் நம்பிக்கையின் விதை
- மடாலயங்களிலும் பள்ளிகளிலும் முளைத்தது.



**Angela Merici** – பெண்கள் கல்வியின் விதையை விதைத்தார்.

**Mary Lyon** – உயர்கல்வி கதவுகளை பெண்களுக்கு திறந்தார்.

**Savitribai Phule** – கல்வியின் விளக்கேற்றி.

**வேதாகமம் பெண்களின் வலிமையை பேசுகிறது:**

**Deborah** – ஒரு நாட்டை வழிநடத்திய தலைவி.

**Priscilla** – அறிவை போதித்த ஆசிரியர்.

**Mary, mother of Jesus** – கீழ்ப்படிதலின் உன்னத உதாரணம்.

- ஒரு பெண் எழுந்தால்
- ஒரு குடும்பம் எழும்.
- ஒரு பெண் கல்வி கற்றால்
- ஒரு சமூகம் மாற்றம் காணும்.

**பெண் என்பது**

- வாழ்க்கையின் ஒளி,
- சமூகத்தின் வலிமை,
- மனித குலத்தின் எதிர்காலம்.

பெண்கள் தின வாழ்த்துகள் .

By.

**Dr. அனுசுயா ராமசாமி,** பாண்டிச்சேரி.

## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

**நமது தரிசனம்**

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

GODependence

**நமது பணித்திட்டம்**

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஏப்ரல் 2026 முதல்

**“வேதாகமத்தை வாசிக்கும் கிறிஸ்தவர்கள் வளருகிற கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் வேதாகமம் வாசிப்பதை நிறுத்தும்போது, அவர்கள் வளருவதும் நின்றுவிடுகிறது.” - ஜான் வெஸ்லி**

தேவன் நமக்காகப் பாதுகாத்து வைத்திருக்கும் முழுமையான ஆசீர்வாதங்கள் மற்றும் போதனைகளைக் கற்றுக்கொள்வதற்காக நீங்கள் முழு வேதாகமத்தையும் இன்னும் வாசிக்கவில்லை என்றால், 01 ஏப்ரல் 2026 அன்று தொடங்கும் எமது ”வேதவாசிப்புச் சவால்களில்” ஒன்றில் சேர உங்களை அன்புடன் அழைக்கிறோம். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க முடிவெடுத்ததற்காகவும் எங்களுடன் இணைந்து அதனை தொடர்ந்து வாசிப்பதற்காகவும் நீங்கள் ஒருபோதும் வருந்த மாட்டீர்கள் என்பது எமது நம்பிக்கை.




நாம் வேதத்தில் வசனங்களைத் தேடி வாசிக்கும்போது, நம் குணநலன் மற்றும் நடத்தை மீது அமர்ந்து நம்மை நியாயம் விசாரிக்கும்படி, நம்மைச் சோதித்தறியும்படி நாம் அவைகளை அனுமதிக்க வேண்டும். - ஜெரி ப்ரிட்ஜஸ்

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஏப்ரல் 2026 முதல்

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

👱‍♀️ "வாழ்க்கையில் முதல் முறை முழு வேதம் வாசித்திருக்கிறேன். இனிமையான, தெய்வீக அனுபவம். தேவன் என்னை தெரிந்து கொண்டார். இவ்வளவு நாளாக முழு வேதம் படிக்காததற்கு வருத்தப்பட்டேன். மீண்டும் முழு வேதம் வாசிக்க ஆசையாய் இருக்கிறேன்." **- D. Renuka**

👱‍♀️ "தேவ வார்த்தைகளை முறைப்படி வாசிக்க முடிந்தது. இந்த குழுவில் இணைந்து நான்காவது முறையாக 3 மாதங்களில் பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்து முடிக்க தேவன் உதவினார். என்னுடைய வாழ்க்கையில் தேவனோடு உள்ள ஐக்கியம் மேம்பட்டிருக்கிறது." **- P. Augusta**

👱‍♀️ "இந்த வேதவாசிப்பு சவாலில் இணைந்து வேதம் வாசிக்கும் போது அவசியமில்லாத வேலைகளுக்கு நேரமில்லை. நாட்கள் மிகவும் அருமையாக கழிந்தன." **- M. John Flora**

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

# வேதவாசிப்பு சவால்கள்

## 01 ஏப்ரல் 2026 முதல்

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

❝ எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

-̇ GODependence குழு

CLICK HERE » wa.me/96565962559

**** ☝️ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! ❞

நான் தேவனுடைய புத்தகம்: மனிதனே, என்னை வாசி. நான் தேவனுடைய வார்த்தை: என்னைத் திறந்து பார், தேவனால் எழுதப்பட்ட வார்த்தையாக நான் இருக்கிறபடியால், என்னை வாசி. ஏனெனில் அவரே என்னை எழுதிய ஆசிரியர், எல்லா இடங்களிலும் அவரைப் பார்க்கவும், அவர் தன்னை வெளிப்படுத்துவதையும் நீ காண்பாய். - சார்லஸ் ஸ்பர்ஜன்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

| சவால் | தினமும் | வாசிப்பு நேரம் |
|---|---|---|
| 1 மாத வேதவாசிப்புச் சவால் | 45 அதிகாரங்கள் | 2 மணி 30 நிமிடங்கள் |
| 2 மாத வேதவாசிப்புச் சவால் | 22 அதிகாரங்கள் | 1 மணி 30 நிமிடங்கள் |
| 3 மாத வேதவாசிப்புச் சவால் | 15 அதிகாரங்கள் | 60 நிமிடங்கள் |
| 4 மாத வேதவாசிப்புச் சவால் | 11 அதிகாரங்கள் | 45 நிமிடங்கள் |
| 6 மாத வேதவாசிப்புச் சவால் | 7 அல்லது 8 அதிகாரங்கள் | 25 நிமிடங்கள் |
| 1 வருட வேதவாசிப்புச் சவால் | 3 அல்லது 4 அதிகாரங்கள் | 15 நிமிடங்கள் |

உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்வதே சாத்தான் அவிழ்த்துவிடும் பொய்களுக்கு எதிரான மிகச் சிறந்த பாதுகாப்பு ஆகும்.

GODDependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.


**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

நாம் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானிக்கையில், தேவனுடைய சித்தத்தையும் இந்த உலகத்தில் உள்ள அவருடைய ஜனங்களுக்கான அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 17

## வேதப்பகுதி: தீத்து & பிலேமோன்



### ➡ இடமிருந்து வலம்

2. ஆரோக்கிய உபதேசத்தினால் சொல்லப்படுவது (3)
4. பவுலுடன் காவலில் வைக்கப்பட்டிருந்தவன் (6)
10. உன்னை __ பண்ண இடங்கொடாதிருப்பாயாக (4)

### ⬅ வலமிருந்து இடம்

1. பவுலால் உத்தமகுமாரன் என்று சொல்லப்பட்டது யார்? (3)
11. நான் பெற்ற மகன் என்று பவுல் சொன்னது யாரை? (4)
14. கிரேத்தாத்தீவார் ஒயாப்___. (4)

### ⬇ மேலிருந்து கீழ்

3. பவுல் தீத்துவை விட்டு வந்த தீவு(4)
5. நாம் நம்பியிருக்கிறது ஆனந்த___ (5)
6. பரிசுத்தவான்களுடைய உள்ளங்களை இளைப்பாறப் பண்ணினவன் (4)
7. இரட்சிப்பை அளிக்கத்தக்க __ பிரசன்னமாகி.... (5)
8. நியாயசாஸ்திரியின் பெயர் (2)

### ⬆ கீழிருந்து மேல்

9. நாம் வெறுக்க வேண்டியவைகளில் ஒன்று (5)
10. உடன்போர்ச்சேவகன் (6)
12. எல்லா மனுஷருக்கும் காண்பிக்க வேண்டியது (6)
13. பவுல் நிக்கொப்போலியில் தங்கும்படி தீர்மானித்திருந்தது __காலம் (2)
15. இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் (3)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE [https://forms.gle/tg2MAx94oPvMXF5a8](https://forms.gle/tg2MAx94oPvMXF5a8)

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/03/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், இயேசுவை நோக்கிச் செல்ல வழிகாட்டுகிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

# இந்திய அப்போஸ்தலன்
# சாது சுந்தர்சிங் (1889-1929)

மென்மையான ஆடையினூடே பனிக் குளிரானது பாய்ந்து கொண்டிருந்தது. கற்களும், முட்களும் அவரது கால்களைக் கிழித்துக் கொண்டிருந்தன. என்றாலும் பனியால் மூடிய மலைகள்மீது அவர் நடந்துகொண்டே இருந்தார். அவருடைய இரத்தம் கசியும் பாதங்கள் அவருக்குப் பின்னால் வெண்மையான பனியின்மீது அடிச்சுவட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஒரிடத்தில் அவர் உட்கார்ந்து தன் கால்களின் புண்களைக் கட்ட ஆரம்பித்தார். அவ்வழியே அவருக்குப் பின்னாக வந்த ஒருவர் அவரைப் பார்த்து நின்று அவரோடு பேச ஆரம்பித்தார். "ஐயா, எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு "என்னுடைய அருமை இரட்சகராம் இயேசு கிறிஸ்துவில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று சாது சுந்தர்சிங் பதில் கூறினார்.

"ஏன் நீங்கள் இரத்தம் கசியும் வெறும் கால்களால் மலைமீது இவ்விதமாகப் பயணம் செய்ய வேண்டும்?".

"கல்வாரி சிலுவையிலே தம் கால்களில் இரத்தம் சிந்தின அவரை மக்களுக்குக் காண்பிப்பதற்காக இவ்விதமாகச் செல்கிறேன்" என்று பதிலளித்தார்.

சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை திபெத் நாட்டிற்கும், இன்னும் ஆண்டவரைப் பற்றிக் கேள்விப்பட்டிராத இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்காகத் தனக்குக் கிடைத்த தெய்வீக அழைப்பை சாது சுந்தர்சிங் முழுவதும் நம்பி அதைச் செயல்படுத்தினார்.

### இளமைப்பருவம்:

சாது சுந்தர்சிங் என்று பொதுவாக அழைக்கப்படும் சுந்தர்சிங் 1889ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ராம்பூர் என்ற இடத்தில் பிறந்தார். இவர் பெற்றோர் சீக்கிய மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். அவருடைய தாயார் மத நம்பிக்கையில் மிகவும் பக்தி நிறைந்தவராய் இருந்தார். காலையில் சுந்தர் எழுந்தவுடனே முதன்முதலாகத் தேவையான நேரத்தைக் கடவுளிடத்தில் பிரார்த்தனை செய்வதில் செலவழிக்க வேண்டும் என்றும், அதன் மூலமாக ஆன்மீக ஆகாரத்தையும் ஆசிகளையும் பெற்று அதன் பின்னரே அவர் காலை ஆகாரத்தை உண்ணவேண்டும் என்றும் அவரது தாய் மிகவும் வலியுறுத்தினார். தன் மகனை மிகவும் அதிகமாக நேசித்ததினால் தன்னுடைய மகனும் தங்களுடைய மார்க்கத்தை அதிகமாக நேசித்து அதிலே ஒரு பக்தி நிறைந்த சாதுவாக மாற வேண்டும் என்று விரும்பினார்.

இளமைப் பருவத்திலிருந்தே சுந்தர் இந்து மார்க்கத்தின் புனித நூல்களை, குறிப்பாக பகவத்கீதையை ஆழ்ந்து படித்தார். அவர் ஏழு வயதாக இருக்கும்போது அதை மனப்பாடம் செய்யவும் ஆரம்பித்தார். அவருக்கு மிகவும் அருமையாக இருந்த ஒரு நண்பனின் மறைவு புறமதத்தின் புனிதப் புத்தகங்களைப் படிக்கும்படித் தூண்டிற்று. அநேக சமயங்களில் வீட்டில் அனைவரும் நித்திரைக்குச் சென்ற பின்பு சீக்கியர்களின் புனித புத்தகமாகிய கிரந்தத்தையோ அல்லது இந்துமத நூல்களையோ அல்லது முஸ்லீம்களுடைய குரானையோ அவர் நுட்பமாகப் படிப்பார். ஆவிக்குரிய வாழ்க்கையில் திருப்தி காண வேண்டும் என்னும் வாஞ்சை ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்டு. அதே வாஞ்சை சுந்தரையும் பற்றிக் கொண்டது.

### ஜீவிக்கும் கிறிஸ்துவைச் சந்தித்தல்:

சுந்தர் படித்துக் கொண்டிருந்த கிராமத்து மிஷன் பள்ளிக்கூடத்தில்தான் முதன்முதலாக அவருக்குகிறிஸ்து மார்க்கத்தோடு தொடர்பு ஏற்பட்டது. வேத புத்தகத்திலிருந்து வசனத்தை

நான் பரிசுத்த வேதாகமத்தை கடமைக்காக வாசிப்பதில்லை. இயேசு என் சிறந்த நண்பராக இருப்பதாலும், அவரைப் பற்றிய அனைத்தையும் அறிந்து கொள்ள விரும்புவதாலும் நான் வேதாகமத்தை வாசிக்கிறேன். - பெயர் அறியப்படாதவர்

வாசிக்கச் சொன்னபோது அவருடைய உள்ளம் அதை எதிர்த்துக் குமுறியது. புதிய ஏற்பாட்டைப் பகிரங்கமாகக் கிழித்து எறிந்ததின் மூலமாக கிறிஸ்து மார்க்கத்தினை எதிர்க்கும் எல்லா மாணவர்களுக்கும் அவர் தலைவரானார். பிறகு அவர் அந்த மிஷன் பள்ளிக்கூடத்தை விட்டு அரசு பள்ளிக்கூடத்தில் போய் சேர்ந்தார். மேலும், தொடர்ந்து கிறிஸ்து மார்க்கத்தையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் அவர் ஆழமாகக் கண்டித்தார்.

பல சமயங்களில் தெருவில் அல்லது திறந்தவெளியில் நின்று பிரசங்கிக்கும் மிஷனெரிமார்கள் மீது கற்களையோ அல்லது சேற்றையோ எடுத்து வீசும்படியாக முரடர்களை அவர் தூண்டி விடுவதும் உண்டு. அதுமட்டுமல்லாமல் அவர் புதிய ஏற்பாட்டைப் பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் தீயிட்டுக் கொளுத்தியதும் உண்டு. அவர் அதிகமாக இயேசு கிறிஸ்துவையும் கிறிஸ்தவ மார்க்கத்தையும் எதிர்த்துப் போராடினார். அதனால் அவருடைய இருதயத்தில் குழப்பமும் அமைதியின்மையும் ஏற்பட்டது. இறுதியில் அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்தார்.

உண்மையான சமாதானத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் அல்லது தன் வீட்டின் பக்கத்திலே கடந்து செல்லும் ரயில் முன் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டார். ஒருநாள், அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் அவர் எழுந்தார். குளித்துவிட்டு, ”கடவுளே! உண்மையான கடவுள் ஒருவர் உண்டு என்றால் உம்மை எனக்குக் காண்பியும். இரட்சிப்பிற்கு உரிய வழியையும், சாந்தியையும் நீர் எனக்கு தர வேண்டும்” என்று சொல்லி அவர் ஜெபிக்க ஆரம்பித்தார். உடனே அந்த அறையில் ஒரு பேரொளி வீசியது. அதில் அவர் மிகவும் வெறுத்து வந்த இயேசு கிறிஸ்துவின் சாயலைக் கண்டார். அவர் தமது ஆணிகள் பாய்ந்த கரத்தை சுந்தருக்குக் காண்பித்து, ”நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்? நான் உன்னுடைய இரட்சகர்” என்று சொன்னார்.

அப்பொழுதே சுந்தரின் இதயம் மாபெரும் மகிழ்ச்சியினால் நிரம்பியது. அதுவரையில் தன் வாழ்க்கையில் நாடித் தவித்துக் கொண்டிருந்த ஆவிக்குரிய தாகமும் தணிந்ததை அவர் உணர்ந்தார். அவர் வாழ்க்கை முழுவதும் மாறியது. அவர் அடைந்த இந்த மகத்தான பரவசமான அனுபவத்திலிருந்து அவரைச் சந்தேகப்பட வைக்கவோ அல்லது மாற்றவோ யாராலும் முடியவில்லை.

**துன்பப்படுவதற்கான அழைப்பு:**

இவ்விதமான இந்தப் புதிய அனுபவத்தைப் பெற்ற சுந்தர் உடனடியாக தனது தந்தையிடம் சென்று, தான் ஒரு கிறிஸ்தவனாகிவிட்டதைக் கூறினார். அவருடைய தந்தை இதை முதலில் நம்பவில்லை. ஆனால் பிறகு அவருடைய குடும்பம் முழுவதுமே சுந்தர் கிறிஸ்தவனாக மாறுவதற்கு எடுத்த தீர்மானத்தைக் கண்டு அதிர்ச்சியுற்றது. தன்னுடைய தாயாரின் மார்க்கத்திற்கு எந்தவிதமான களங்கமும் ஏற்படுத்திவிடக் கூடாது என்று சுந்தரை அவரது தந்தையார் மிகவும் அதிகமாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அவருடைய செல்வந்தரான மாமா ஒருவர் தன்னுடைய பெரிய மாளிகைக்கு அழைத்துச் சென்று அங்கே குவியல் குவியலாக வைக்கப்பட்ட பணத்தையும், வைரங்களையும், பலவிதமான விலையுயர்ந்த கற்களையும் அவருக்குக் காட்டினார். சுந்தர் புதியதாக ஏற்றிருக்கிற இந்த விசுவாசத்தைக் கைவிடுவதானால் இவை எல்லாம் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் இயேசு கிறிஸ்துவின் அன்பு மிகவும் வலிமையுடன் ஆழமாக இருந்தது. சுந்தரின் இருதயம் இயேசுவை மறுதலிக்கவில்லை. சுந்தர் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார். உண்பதற்கு உணவோ, தங்குவதற்கு உறைவிடமோ இல்லை. ஒரு மரத்தின் அடியில் தங்கினார். பிறகு மீண்டும் அவர் வீட்டிற்குள் அனுமதிக்கப்பட்டார். ஆனால் வீட்டிற்கு வெளியில் வைத்து உணவு கொடுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட வேலையாட்களோடு அவர், தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டார். இயேசு கிறிஸ்துவுக்காக இனி தொடர்ந்து அவர் அனுபவிக்கப்போகிற பாடுகளுக்கு இது ஆரம்பக்கட்டமாகும்.

--தொடரும்--

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய “சிலுவையின் ஊழியர்கள்” (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**



தேவனுடைய வார்த்தையை தியானிப்பது கடினமான எல்லா தருணங்களிலும் அமைதியையும் பலத்தையும் தரக்கூடியதாக இருக்கிறது என வேதாகமம் கூறுகிறது. - டேவிட் ஜெரேமியா

# நீங்கள் ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?

- டாக்டர் அனிஷா, குவைத்

**வாழ்க்கை கற்பனை செய்ய முடியாத சவால்களால் உங்களை அச்சுறுத்தும்போது, நீங்கள் அதை எப்படி கையாளுகிறீர்கள்?**

நாம் பார்ப்பதற்கு நம்பிக்கையுடனும், அழகாகவும் உடை அணிந்திருந்தாலும், வாழ்க்கையின் இடர்பாடுகளுக்கு மிக எளிதாக அடிபணிந்து விடுகிறோம்!

உங்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனை (Breakthrough) ஏற்பட, **நீங்கள் செய்ய வேண்டிய முதல் படி: உங்கள் மனதை மதிப்பீடு செய்யுங்கள்!** நீங்கள் உங்கள் பிரச்சனைகளைப் பெரிதுபடுத்துகிறீர்களா அல்லது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளையா?

மத்தேயு 14:31 ”இயேசு உடனே தம்முடைய கையை நீட்டி, அவனைப் பிடித்து: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.”

நாம் அவர் மேல் முழு நம்பிக்கை வைக்கவும், அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கவும், நமது அமைதியற்ற எண்ணங்களை அமைதிப்படுத்தவும் இயேசு விரும்புகிறார். அவருடைய கரம் எப்போதும் நீட்டப்பட்டே இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**இரண்டாவதாக, தேவனுடைய எல்லைகளை விரிவுபடுத்துங்கள்!**

கொலோசெயர் 3:2 ”பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் (உயர்வான காரியங்களின் மேல்).”

இது ஒரு வியூகம்! நமது மனதின் மீது நமக்கு ஆதிக்கம் இருக்கும்போது, எதிரியின் எந்தத் திட்டமும் நம்மை நடுங்கச் செய்ய முடியாது. உங்கள் எண்ணங்களை பரலோகத்தோடு இணைத்துக் கொள்ளுங்கள், அப்போது பயம் தன் அதிகாரத்தை இழக்கும், கவலை தன் பலத்தை இழக்கும், சந்தேகம் தன் குரலை இழக்கும்.

ஏசாயா 43:2-ல் கர்த்தர் கூறுகிறார்: ”நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினிஜுவாலை உன்மேல் பற்றாது.”

சோதனைகளிலிருந்து நமக்கு விலக்கு அளிப்பதாக தேவன் ஒருபோதும் வாக்குறுதி அளிக்கவில்லை, ஆனால் அந்தச் சோதனைகளின் மத்தியிலும் தமது பிரசன்னம் இருக்கும் என்று அவர் உறுதி அளிக்கிறார். பெரும்பாலும், எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போகும் அந்த ”பதினோராம் மணிநேரத்தில்” தேவன் நமக்காக வெளிப்படுகிறார்.

**மூன்றாவதாக, தேவனுடைய அன்பைத் தழுவிக்கொள்ளுங்கள்!** மற்றவர்களின் அங்கீகாரத்திற்காகப் போராடுவதையும், எதிர்ப்புகளைக் கண்டு நடுங்குவதையும் நிறுத்துங்கள். அவருடைய மாறாத பிரசன்னத்தில் இளைப்பாறத் தேர்ந்தெடுங்கள்.

நீங்கள் சாதாரணமானவர் அல்ல, புறக்கணிக்கப்பட்டவர் அல்ல, அல்லது பதிலீடு (Replaceable) செய்யப்படக்கூடியவர் அல்ல. நீங்கள் தேவனுக்கு மிகவும் விலையேறப்பெற்றவர் என்பதை தினமும் உங்களுக்குள் நினைவூட்டிக் கொள்ளுங்கள்.

”ஆதலால், பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.” - மத்தேயு 10:31 இன் படி, தேவன் உங்கள்மேல் அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்!

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்




## உங்களுக்குத் தெரியுமா?

### உலகளாவிய காட்சி தொடர்பு வலையமைப்பை பைபிள் முன்னறிவித்தது உங்களுக்குத் தெரியுமா?

ஆம், சுமார் 1927 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஒரு தெளிவான குறிப்பு உள்ளது. இது இன்னும் நடக்காத ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறது. இது தேவனால் பூமிக்கு அனுப்பப்படும் இரண்டு சாட்சிகளின் மரணத்தைப் பற்றியது. 'மிருகம்' என்று பெயரிடப்பட்ட ஒரு ஆட்சியாளர் அவர்களைக் கொன்றுவிடுவார். அதன் பிறகு என்ன நடக்கும் என்பது பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பாருங்கள். "ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள்வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்." (வெளிப்படுத்துதல் 11:8, பைபிள்). பைபிள் அதை எப்படி முன்னறிவிக்க முடியும்? ஏனென்றால் பைபிள் எதிர்காலத்தை அறிந்த சர்வவல்லமையுள்ள கடவுளின் ஏவுதலால் எழுதப்பட்டுள்ளது. பைபிள் என்ற இந்த அற்புதமான புத்தகத்தைப் படிக்க நீங்கள் ஆர்வமாக இல்லையா???



**உங்களுக்கு தெரியுமா?**

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக அதிக வயதுடைய நபர் மெத்தூசலா, அவர் மரிக்கும்போது அவருக்கு 969 வயது (ஆதியாகமம் 5:27).



**உங்களுக்குத் தெரியுமா?**

மிக உயரமான ராஜாவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? பாசான் ராஜாவாகிய ஒக் மிகவும் பெரிய உருவம் கொண்டவர், அவருடைய இரும்பு மஞ்சம் (கட்டில்) சுமார் 13.5 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்டது (உபாகமம் 3:11).



தேவனுடைய வார்த்தையும் ஆவியும் மட்டுமே சபையில் சீர்த்திருத்தத்தை உண்டாக்கும்.
- W. ராபர்ட் காட்ஃப்ரே

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.3K சந்தாதாரர்களையும் 283 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.




CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி அல்ல, பரிசுத்த வேதாகமத்தையே வாசியுங்கள். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை ஆகும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே தேவனுடைய வார்த்தை. - R. A. டோரி

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**28 பிப்ரவரி 2026 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**






















விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள். - ஜே சி ரைல்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 17

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: தீத்து & பிலேமோன்**

1




2



3



4



5



6



7



8



9



10



https://forms.gle/1BTPsKGWTBewTe2R8

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/03/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 16மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 16 IIதீமோத்தேயு-இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 16

- ஆர். தமிழ்செல்வி
- கே.லதா லிவிங்ஸ்டன்
- சுகந்தி குமார் .யு
- ஆர் ஜோசபின்
- ஜான்ஸ்.ஜே - ஜான்சி
- ரூபி ஜெனட்
- ஜெனிபா தங்கம்
- ஜி. ரேச்சல்
- எஃப்சிபா
- டி. ரேணுகா

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 16

- ஆர். தமிழ்செல்வி
- எப்சிபா
- ஜி. ரேச்சல்
- ஜெனிபா கோல்டு
- கே.லதா லிவிங்ஸ்டன்
- டி. ரேணுகா
- S பானுப்பிரியா

செய்தித்தாளை வாசிக்கிறவர் உலக நடப்பை அறிந்துகொள்கிறார். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர் அவை ஏன் நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்கிறார்.

- பெயர் அறியப்படாதவர்

# பதில்கள்

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 16 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 16 II தீமோத்தேயு-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 16

➡ இடமிருந்து வலம்
1. தேவவசனம் (2:9)
5. விசுவாசம் (1:4)
7. தேமா (4:10)
8. மாற்கு (4:11)
10. எரஸ்து (4:20)
11. வீண்பேச்சுகள் (2:16)

⬅ வலமிருந்து இடம்
2. கிரீடம் (4:8)
4. கார்ப்பு (4:13)

⬆ கீழிருந்து மேல்
6. மரணம் (1:10)
9. ரோமா (1:17)

⬇ மேலிருந்து கீழ்
1. தேவ ஆவி (3:16)
3. ஐனிக்கேயாள் (1:5)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 16

1) 2 தீமோத்தேயு : 3 - 1
2) 2 தீமோத்தேயு : 1 - 5
3) 2 தீமோத்தேயு : 3 -16,17
4) 2 தீமோத்தேயு : 2 - 20
5) 2 தீமோத்தேயு : 4 - 7,8
6) 2 தீமோத்தேயு : 2 - 3
7) 2 தீமோத்தேயு : 1 - 7
8) 2 தீமோத்தேயு : 2 - 15
9) 2 தீமோத்தேயு : 4 - 2
10) 2 தீமோத்தேயு : 2- 3


# ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி


நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசிப்பது எவ்வளவு அவசியமானதோ அதே போல நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமம் அவசியமானது. நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தையை விட மிகவும் அத்தியாவசியமானது என்று எதுவும் இல்லை. - ஜாக் W. ஹேவர்ட்

# இரண்டு காசுகளைப் போட்ட விதவை



(யோவான் 4: 1-30; 39-42)

பெயர் குறிப்பிடப்படாத இந்த ஏழை விதவையின் கதை இரண்டாயிரம் ஆண்டுகளாக அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் ஒரு கண் திறப்பாக இருந்து வருகிறது.

இயேசு காணிக்கைகள் போடப்பட்ட இடத்திற்கு எதிரே அமர்ந்து, மக்கள் தங்கள் பணத்தை ஆலயக் காணிக்கையில் போடுவதைப் பார்த்தபோது இது நடந்தது, பல பணக்காரரர்கள் அதிக அளவில் போட்டனர். ஆனால் ஒரு ஏழை விதவை வந்து, ஒரு சில சென்ட் மதிப்புள்ள இரண்டு மிகச் சிறிய செப்புக் காசுகளைப் போட்டாள். தம்முடைய சீடர்களை அழைத்து, இயேசு, "உண்மையாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன், இந்த ஏழை விதவை மற்ற அனைவரையும் விடக் காணிக்கையில் அதிகமாகப் போட்டாள். அவர்கள் அனைவரும் தங்கள் செல்வத்திலிருந்து கொடுத்தார்கள், ஆனால், அவள், தன் வறுமையிலிருந்து, எல்லாவற்றையும் - அவள் வாழ வைத்திருந்த அனைத்தையும் போட்டாள்."

தியாகம் செய்வது என்பது கடவுளை நம்புவதற்கான ஒரு செயல். அதைச் செய்பவர்கள், கடவுள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்லவர் என்று வாய்மொழியாக அறிவிக்கிறார்கள். பைபிள் நம் குடும்ப உறுப்பினர்களைப் பராமரிக்க நமக்குக் கற்பிக்கும் அதே வேளையில், தியாகம் செய்வதையும் அது பாராட்டுகிறது. (1 தீமோத்தேயு 5:8, 2 கொரிந்தியர் 8:2-5).

மத வட்டாரங்களில் கூட, அதிக அளவில் நன்கொடை அளிப்பவர்களுக்கு மட்டுமே அங்கீகாரம் கிடைக்கிறது. ஆனால் கடவுள் அவருக்கு வழங்கப்படும் தொகையைப் பார்ப்பதில்லை, மாறாக, அவர் கொடுப்பவரின் இதயத்தைப் பார்க்கிறார்.

நாம் எந்த நோக்கத்துடன் கடவுளுக்கு காணிக்கைகளை செலுத்துகிறோம்? மற்றவர்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெறுவதா? அல்லது கடவுளிடமிருந்து சில தயவைப் பெறுவதா? அல்லது கடவுள் மற்றும் அவரது ராஜ்யத்தின் மீதுள்ள தூய அன்பினாலா?

**நம்முடைய அன்பினால் கடவுளுக்குக் கொடுப்போம். கடவுள் மகிழ்ச்சியுடன் கொடுப்பவரை நேசிக்கிறார்.** (2 கொரிந்தியர் 9:7).

**– சகோ. பீட்டர் ஏ.ஆர்., பாலக்காடு, கேரளா.**

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இந்த வசனமானது உங்கள் விருப்பங்களை எல்லாம் தேவன் நிறைவேற்றுவார் என்பதை அல்ல, அவர் தமது விருப்பத்தை உங்கள் இருதயத்தில் விதைப்பார் என்பதைக் குறிக்கிறது. - ஜான் மெக்ஆர்தர்

# பைபிள் அறிமுகம் - தீத்து

## தீத்து

எழுதப்பட்ட காலம் : கி.பி. 62- கி.பி. 64
நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் : கி.பி. 62

நூலின் ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

### நூல் அறிமுகம்

- ஆயர்பணிக் கடிதங்களில் மூன்றாவதாக வருவது தீத்துக்கு எழுதிய இந்தக் கடிதம். வேதாகம வரிசையில் மூன்றாவதாக வந்தாலும் இதுவே முதலில் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இந்நூல்களைத் தொகுத்தவர்கள் அவை எழுதப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு அல்ல, அவற்றின் அளவை அடிப்படையாகக் கொண்டே வரிசைப்படுத்தினார்கள். தீத்து என்பவர் பிற இனத்துக் கிறிஸ்தவர். அவர் பவுலுடன் அந்தியோகியாவிலிருந்து எருசலேம் சென்றார் (கலா 2:1; திப 15:2). பவுலின் மூன்றாம் நற்செய்திப் பயணத்தின் போது உடன் சென்றார் (2 கொரி 1:13; 7:6; 13:4). அவர் கிரேத்துத் தீவின் மேய்ப்பராக விளங்கும் போது இக்கடிதம் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. அங்கே மூப்பர்கள், ஆயர்களை நியமிக்கும் பொறுப்பு இவரிடம் இருந்தது.

### சூழலும் நோக்கமும்

- பவுல் தீத்துவுக்கு எழுதிய இக்கடிதம், தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு கடிதங்களைப் போலவே ஆயர் கடிதங்களில் ஒன்றாகும். பவுல் தனது மிஷனரிப் பயணங்கள் ஒன்றில் நிறுவிய திருச்சபையை வழிநடத்துவதற்காக கிரேத்தா தீவிலே விட்டுச் சென்ற தனது சகோதரரான தீத்துவை விசுவாசத்தில் ஊக்குவிப்பதற்காக இந்த கடிதம் அப்போஸ்தலன் பவுலால் எழுதப்பட்டது (தீத்து 1:5). இந்த கடிதம், என்ன தகுதிகளை உடைய திருச்சபைத் தலைவர்களைத் தேடுவது என்பது குறித்து தீத்துவுக்கு அறிவுறுத்துகிறது. கிரேத்தா தீவில் வசிப்பவர்களின் நற்பெயரைப் பற்றியும் பவுல் தீத்துவை எச்சரிக்கிறார் (தீத்து 1:12). திருச்சபைத் தலைவரிடம் எதைப் பார்க்க வேண்டும் என்று தீத்துவுக்கு அறிவுறுத்தியதோடு, நிக்கொப்போலிக்கு வரும்படி தீத்துவைப் பவுல் ஊக்குவித்தார் (தீத்து 3:12). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கர்த்தருடைய கிருபையில் வளர்ந்தபோது பவுல் தீத்துவையும் மற்றவர்களையும் சீஷராகத் பின்தொடர்ந்தார் (தீத்து 3:13).

### முக்கிய வசனங்கள்

தீத்து 1:5, தீத்து 1:16, தீத்து 2:15, தீத்து 3:3-6

### புத்தகத்தின் சுருக்கம்

- தமது வழிகாட்டியான அப்போஸ்தலன் பவுலிடமிருந்து தீத்துவுக்கு ஒரு கடிதம் வந்தபோது அது எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும். கிழக்கத்திய உலகம் முழுவதும் பல திருச்சபைகளை நிறுவிய பிறகு, பவுல் மிகவும் மரியாதைக்குரிய மனிதராக இருந்தார். அப்போஸ்தலரின் இந்த புகழ்பெற்ற முன்னுரையை தீத்து படித்திருப்பார்: "எங்கள் பொதுவான நம்பிக்கையில் என் உண்மையான மகன் தீத்துவுக்கு: பிதாவாகிய கடவுளிடமிருந்தும் நம் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவிடமிருந்தும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக." (தீத்து 1:4). திருச்சபையை வழிநடத்த பவுல் விட்டுச்சென்ற கிரேத்தா தீவில், அத்தீவின் பூர்வீகவாசிகளும் இயேசு கிறிஸ்துவின் உண்மையை அறியாத யூதர்களும் வசித்து வந்தனர் (தீத்து 1:12-14). கிரேத்தாவில் உள்ள திருச்சபையில் உள்ள தலைவர்களை வளர்ப்பதில் தீத்துவை அறிவுறுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் அவரைப் பின்தொடர்வது தனது பொறுப்பு என்று பவுல் உணர்ந்தார். அப்போஸ்தலனாகிய பவுல், தலைவர்களைத் தேடுவதில் தீத்துவை வழிநடத்தியது போல, கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தில் அவர்கள் வளர, தலைவர்களுக்கு தீத்து எவ்வாறு அறிவுறுத்துவார் என்பதையும் பவுல் பரிந்துரைத்தார். அவருடைய அறிவுரைகள் எல்லா வயதினருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அடங்கியவை (தீத்து 2:1-8). கிறிஸ்து மீதான தனது நம்பிக்கையில் தீத்து தொடர அவருக்கு உதவும்படி, நிக்கொப்போலிக்கு வந்து, திருச்சபையின் மற்ற இரண்டு உறுப்பினர்களை தன்னுடன் அழைத்து வருமாறு பவுல் பரிந்துரைத்தார் (தீத்து 3:12-13). கிரேத்தா தீவில் திருச்சபை வளர்ச்சி குன்றிய சூழ்நிலையில் தீத்து சரியான உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனப் பவுல் பணித்தார் (தீத்து1:5-16). கிரேத்தா சபையிலுள்ள முதியவர், இளைஞர், அடிமைகள் ஆகியோருக்கு எப்படிப் போதிப்பது என எடுத்துக் காட்டுகிறார், இறுதியாகக் கிறிஸ்தவ நல்லொழுக்கத்துடன் அமைதியுடனும் அன்புடனும் இருத்தல், பகைமை, வாக்குவாதம், பிளவுகள் ஆகியவற்றைத் தவிர்த்தல் ஆகியவை குறித்துப் பேசுகிறார், கிரேத்தா மக்கள் தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ளக் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பலியே முன் மாதிரி என்கிறார் பவுல்.

### தொடர்புகள்

- கொரிந்தியர்களின் கலகக்கார வஞ்சகர்களுக்கு எதிராக அவர் எச்சரிக்கிறார், குறிப்பாக விருத்தசேதனம் மற்றும் மோசே சட்டத்தின் சடங்குகள் மற்றும் சடங்குகளை கடைபிடிப்பது இன்னும் அவசியமாக இருந்தது (தீத்து 1:10-11). இது பவுலின்கடிதங்கள் முழுவதிலும் ஒரு தொடர்ச்சியான கருப்பொருளாகும், மேலும் தீத்துவின் புத்தகத்தில், அவர்களின் வாய் நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அவர் செல்கிறார்.

### நடைமுறைப் பயன்பாடு

- நம்முடைய கர்த்தருக்குப் பிரியமான ஒரு வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பது குறித்த அறிவுறுத்தலுக்காக வேதாகமத்தைப் பார்க்கும்போது, தீத்து புத்தகம் நம் கவனத்திற்குத் தகுதியானது. நாம் எதைத் தவிர்க்க வேண்டும், எதைப் பின்பற்ற வேண்டும் என்பதை நாம் இங்கு கற்றுக்கொள்ளலாம். நம் மனதையும் மனசாட்சியையும் கெடுக்கும் விஷயங்களைத் தவிர்ப்பதால் நாம் தூய்மையாக இருக்க முயல்கிறோம் என்று பவுல் கூறுகிறார். பின்னர் பவுல் ஒரு அறிக்கையை கூறுகிறார், இது ஒருபோதும் மறக்கப்படக்கூடாது: "அவர்கள் கடவுளை அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் தங்கள் செயல்களால் அவரை மறுக்கிறார்கள். அவர்கள் அருவருப்பானவர்கள், கீழ்ப்படியாதவர்கள், நன்மை செய்யத் தகுதியற்றவர்கள்" (தீத்து 1:16). கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையுடன் நமது வாழ்க்கையும் ஒத்துப்போகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும் (2 கொரி 13:5). இந்த எச்சரிக்கையுடன், கடவுளை மறுதலிப்பதை எவ்வாறு தவிர்ப்பது என்பதையும் பவுல் நமக்குக் கூறுகிறார்: "நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலம் அவர் தாராளமாக நம்மீது பொழிந்த பரிசுத்த ஆவியின் மறுபிறப்பு மற்றும் புதுப்பித்தலின் மூலம் அவர் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5b- 6) பரிசுத்த ஆவியானவரால் தினசரி நம் மனதைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலம், நாம் வாழும் விதத்தில் கடவுளை மதிக்கும் கிறிஸ்தவர்களாக நாம் உருவாகலாம்.

### நூலின் அமைப்பு

1) முன்னுரை (வாழ்த்து) 1:1 - 4
2) கிரேத்தாவில் தீத்துவின் பணி 1:5 - 16
3) திருச்சபையில் பல்வேறு குழுக்களின் கடமைகள் 2:1 - 15
4) அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் 3:1 - 11
5) முடிவுரை 3:12- 15

GODependence
தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

தேவனுடைய வார்த்தை எனும் நங்கூரத்திலிருந்து நாம் துண்டிக்கப்படுவோமெனில், நாம் விடுதலையைப் பெறமாட்டோம். மாறாக, நாம் நமது தனிப்பட்ட உணர்வுகளுக்கும் உலகின் பிரபலமான போக்குகளுக்கும் அடிமைகளாகிவிடுவோம். - ஜான் பைபர்

# பிலேமோன்

எழுதப்பட்ட காலம் : கி.பி. 60- கி.பி. 62
நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் : கி.பி. 60

நூலின் ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- புதிய ஏற்பாட்டுத் கடிதங்களுள் பரிந்துரை மடலாக விளங்குவது பிலேமோனுக்கு எழுதப்பட்ட கடிதமாகும். அழகிய சொல்லாட்சியுடன் நளினமாக முறையில் பவுல் இச்சிறுகடிதத்தை எழுதியுள்ளார். கிறிஸ்தவ அன்பு மன்னிப்பு மிகுந்ததாய், தீமை செய்தோரையும் அன்புடன் ஏற்றுக் கொள்வதாய் அமைய வேண்டும் எனும் உயரிய கருத்தை இக்கடிதம் எடுத்துக் கூறுகிறது. இக்கடிதம் நேர்த்தியான முறையில் வரையப்பட்டுள்ளது. பழங்கால உரோம, கிரேக்க இலக்கிய முறையில் இக்கடிதத்தில் வரும் பரிந்துரை அமைந்துள்ளது.

## சூழலும் நோக்கமும்

- பிலேமோனுக்கு எழுதிய கடிதம் பவுலின் அனைத்து எழுத்துக்களிலும் மிகக் குறுகியது. கடிதம் எழுதப்பட்ட நேரத்தில் பவுல் சிறையில் இருந்தார். பிலேமோன் ஒரு அடிமையின் தலைவராக இருந்தார். அவர் தனது வீட்டில் ஒரு திருச்சபையை நடத்தினார். எபேசுவில் பவுல் ஊழியம் செய்த காலத்தில், பிலேமோன் அந்த நகரத்திற்குப் பயணம் செய்து, பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு ஒரு கிறிஸ்தவராக மாறியிருக்க வாய்ப்பு உண்டு. அடிமை ஒநேசிமு தனது எஜமானரான பிலேமோனிடம் கொள்ளையடித்துவிட்டு ஓடிப்போய் பவுல் இருந்த ரோம் நகருக்கு சென்றார். ஒநேசிமு இன்னும் பிலேமோனின் சொத்தாகவே இருந்தார். மேலும் பவுல் தனது எஜமானரிடம் ஒநேசிமு திரும்புவதற்கான வழியை மென்மையாக்க எழுதினார். பவுல் ஒநேசிமுவுக்கு சாட்சி கொடுத்ததன் மூலம், ஒநேசிமு ஒரு கிறிஸ்தவராக மாறினார் (பிலேமோன் 10) மேலும் பிலேமோன் ஒனேசிமுவை கிறிஸ்துவில் ஒரு சகோதரனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார். வெறுமனே அடிமையாக அல்ல. கொலேசை நகரிலிருந்த முக்கிய கிறிஸ்தவரும் செல்வருமான பிலேமோன் என்பவரிடம் ஒநேசிமு என்பவர் அடிமைத் தொழில் செய்து வந்தார். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அவர் தலைவரிடமிருந்து தப்பியோடிவிட்டார் (18). இதற்கு ரோமச் சட்டப்படி மரணதண்டனை கொடுக்கலாம். ஆனால் ஒநேசிமு தம் தலைவரின் நண்பரான தூய பவுலை நாடி வந்தார்; சிறிது காலம் அவரோடு இருந்து கிறிஸ்தவராகிய பின்னர் தம் தலைவரிடம் திரும்பிச் செல்ல விழைந்தார். அப்போது பவுல், பிலேமோன் ஒனேசிமுவை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோரி இப்பரிந்துரைக் கடிதத்தை எழுதி அனுப்புகிறார். இக்கடிதத்தைப் பவுல் கி.பி. 61ஆம் ஆண்டு ரோமச் சிறையிலிருந்து எழுதினார்.

## முக்கிய வசனங்கள்

பிலேமோன் 6, 16, 18

## புத்தகத்தின் சுருக்கம்

- அடிமைகளின் உரிமையாளர்களுக்கு அடிமைகள் மீது பொறுப்பு இருப்பதாக பவுல் எச்சரித்தார், மேலும் அடிமைகளை தேவனுக்குப் பயப்பட வேண்டிய பொறுப்புள்ள தார்மீக மனிதர்களாகக் காட்டினார். பிலேமோனில், பவுல் அடிமைத்தனத்தைக் கண்டிக்கவில்லை, ஆனால் அவர் ஒனேசிமுவை அடிமைக்கு பதிலாக ஒரு கிறிஸ்தவ சகோதரராக முன்வைத்தார். ஒரு உரிமையாளர் ஒரு அடிமையை சகோதரன் என்று குறிப்பிடும்போது, அடிமை என்ற சட்டப்பூர்வ தலைப்பு அர்த்தமற்றதாக இருக்கும் நிலையை அடிமை அடைந்துவிட்டான். ஆரம்பகால திருச்சபை அடிமைத்தனத்தை நேரடியாகத் தாக்கவில்லை, ஆனால் அது உரிமையாளருக்கும் அடிமைக்கும் இடையே ஒரு புதிய உறவுக்கு அடித்தளம் அமைத்தது. பவுல் பிலேமோன் மற்றும் ஒநேசிமு இருவரையும் கிறிஸ்தவ அன்புடன் இணைக்க முயன்றார். நற்செய்தியின் ஒளியை வெளிப்படுத்திய பின்னரே அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அவசியம் என்பதை அவர் உணர்ந்தார்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- ஒரு வேளை புதிய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் உள்ள வேறுபாட்டை வேறு எந்த புத்தகமும் இவ்வளவு அழகாகச் சித்தரிக்கவில்லை. ரோமானிய சட்டம் மற்றும் பழைய ஏற்பாட்டின் மோசேயின் சட்டம் ஆகிய இரண்டும் பிலேமோனுக்கு சொத்தாகக் கருதப்படும் ஓடிப்போன அடிமையைத் தண்டிக்கும் உரிமையை அளித்தன. ஆனால் கர்த்தராகிய இயேசுவின் மூலம் உண்டான கிருபையின் உடன்படிக்கை, எஜமானர் மற்றும் அடிமை இருவரையும் கிறிஸ்துவின் உடலில் சமமான அடிப்படையில் அன்பில் கூட்டுறவு கொள்ள அனுமதித்தது.

## நடைமுறைப் பயன்பாடு

- முதலாளிகள், அரசியல் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் கிறிஸ்தவ ஊழியர்கள், உடன் பணிபுரிபவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை கிறிஸ்துவின் உடலின் உறுப்பினர்களாக கருதுவதன் மூலம் பவுலின் போதனையின் உணர்வைப் பின்பற்றலாம். நவீன சமுதாயத்தில் உள்ள கிறிஸ்தவர்கள், தங்கள் உதவியாளர்களை தங்கள் லட்சியங்களை அடைய உதவும் படிக்கற்களாக பார்க்காமல், கருணையுடன் நடத்த வேண்டிய கிறிஸ்தவ சகோதர சகோதரிகளாக பார்க்க வேண்டும். கூடுதலாக, உதவியாளர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்களுக்காக வேலை செய்பவர்களை நடத்துவதற்கு தேவன் அவர்களைப் பொறுப்பேற்கிறார் என்பதை அனைத்து கிறிஸ்தவத் தலைவர்களும் அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் இறுதியில் தங்கள் செயல்களுக்கு தேவனிடம் கணக்கொப்புவிக்க வேண்டும் (கொலோ 4:1).

## நூலின் அமைப்பு

1) முன்னுரை (வாழ்த்து, பிலேமோனின் அன்பும் நம்பிக்கையும்) வச.1 - 7
2) ஒனேசிமுக்காக வேண்டுதல் வச. 8 - 21
3) முடிவுரை வச. 22 – 25

GODDependence
தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் வேதாகமங்களைப் புறக்கணிப்பது, இயேசுவின் மீது உள்ள விசுவாசமின்மையினால் அல்ல. மாறாக வேதாகமத்தை படிக்க நேரத்தையும், இடத்தையும், வழிமுறைகளையும் திட்டமிடுவதில் தோல்வியடைவதால் ஆகும். - ஜான் பைபர்

# வங்காள (Bengali) வேதாகமத்தின் வரலாறு

-பாஸ்டர். Danis Chakraborty, பங்களாதேஷ்.

### அறிமுகம்




கிறிஸ்தவர்களுக்கு **வேதாகமம்** என்பது விசுவாசிகளின் நம்பிக்கையையும் தினசரி வாழ்க்கையையும் வழிநடத்தும் தேவனுடைய ஜீவவார்த்தையாகும். பலர் Bible என்ற சொல்லை “Basic Instructions Before Leaving Earth” (இந்த பூமியை விட்டு செல்லும் முன் பெறப்பட்ட அடிப்படை அறிவுறுத்தல்கள்) என்று விளக்குகின்றனர். இது அந்தச் சொல்லின் இயல்பான பொருள் அல்ல என்றாலும், வேதாகமத்தின் நோக்கத்தை அழகாக வெளிப்படுத்துகிறது – நித்திய வாழ்வை அடையும் முன் இந்த பூமியில் வாழும் நம் பயணத்திற்கு வழிகாட்டுதல் அளிக்கிறது.

வேதாகமம் சுமார் **1600 ஆண்டுகள்** காலத்தில், பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த சுமார் **40 எழுத்தாளர்களால்** எழுதப்பட்டது. அவர்களில் தீர்க்கதரிசிகள், அரசர்கள், மேய்ப்பர்கள், மீனவர்கள் மற்றும் அறிஞர்கள் இருந்தனர். இது **66 புத்தகங்களை** கொண்டுள்ளது. அவை இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன:

- பழைய ஏற்பாடு – 39 புத்தகங்கள்
- புதிய ஏற்பாடு – 27 புத்தகங்கள்

இந்த இரண்டு பகுதிகளுக்கிடையில் சுமார் **400 ஆண்டுகள்** காலம் உள்ளது. இந்த காலத்தை பொதுவாக **“மௌன ஆண்டுகள்”** (Silent Years) என்று அழைக்கப்படுகிறது. பழைய ஏற்பாடு **மல்கியா** புத்தகத்துடன் முடிவடைகிறது, புதிய ஏற்பாடு **மத்தேயு சுவிசேஷத்துடன்** தொடங்கி இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிமுகப்படுத்துகிறது.

### வேதாகமத்தின் மூல மொழிகள்

இன்று வேதாகமம் ஆயிரக்கணக்கான மொழிகளில் கிடைக்கின்றது. ஆனால் அது முதலில் மூன்று பண்டைய மொழிகளில் எழுதப்பட்டது:

- **எபிரெய மொழி** – பழைய ஏற்பாட்டின் முக்கிய மொழி
- **அராமேய மொழி** – பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளில் பயன்படுத்தப்பட்டது
- **கிரேக்க மொழி** – புதிய ஏற்பாட்டின் மொழி

பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதி எபிரெய மொழியில் எழுதப்பட்டது. ஆனால் **தானியேல்** மற்றும் **எரேமியா** புத்தகங்களில் சில பகுதிகள் அராமேய மொழியில் உள்ளன.

புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. முதல் நூற்றாண்டில் மத்திய தரைக்கடல் உலகில் பொதுவாக பயன்படுத்தப்பட்ட மொழி கிரேக்கமாதலால், அந்த மொழி மூலம் தேவனுடைய இரட்சிப்புச் செய்தி தலைமுறைகள் வழியாக பாதுகாக்கப்பட்டு பரவியது.

### வேதாகமம் மற்றும் உலக மொழிபெயர்ப்புகள்

வேதாகமம் உலகில் **அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட புத்தகமாக** உள்ளது. எபிரெய் வேதத்தை கிரேக்க மொழிக்கு மொழிபெயர்த்த Septuagint என்பது ஆரம்பகால முக்கிய மொழிபெயர்ப்புகளில் ஒன்றாகும். இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்டது.

காலப்போக்கில், மக்கள் தங்கள் தாய்மொழியில் தேவனுடைய வார்த்தையை வாசிக்க முடியும் வகையில் வேதாகமம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அவற்றில் முக்கியமான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஒன்று **கிங் ஜேம்ஸ் பதிப்பு** (King James Version) ஆகும். இது 1611 ஆம் ஆண்டு

முதன்முதலாக வெளியிடப்பட்டு கிறிஸ்தவ இலக்கியத்திலும் பக்தி வாழ்க்கையிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இன்று New International Version (NIV) போன்ற மொழிபெயர்ப்புகள் தெளிவான மற்றும் சமகால மொழியில் வேதாகமத்தை புரிந்துகொள்ள வாசகர்களுக்கு உதவி செய்து வருகின்றன. இந்த உலகளாவிய மொழிபெயர்ப்பு மரபு பின்னர் வங்காள (Bengali) மொழி பேசும் உலகிற்கும் சென்றடைந்தது.

### வங்காள மொழியில் வேதாகம மொழிபெயர்ப்பின் ஆரம்பம்

வங்காள மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் ஆரம்ப முயற்சிகள் இந்திய துணைக்கண்டத்தில் பணியாற்றிய **போர்ச்சுகீஸ் கத்தோலிக்க மிஷனரிகளால்** மேற்கொள்ளப்பட்டன. அவர்களின் நோக்கம், உள்ளூர் மக்களுக்கு கிறிஸ்தவ செய்தியை அவர்களது தாய்மொழியில் எடுத்துச் சொல்லுவதாகும்.

சுமார் **1743 ஆம் ஆண்டில்,** போர்ச்சுகீஸ் மிஷனரியான **மனுவேல் டா அசும்ப்சாவ் (Manuel da Assumpção)** புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளை வங்காள மொழியில் மொழிபெயர்த்தார். இம்மொழிபெயர்ப்புகள் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், பின்னர் நடந்த பெரிய முயற்சிகளுக்கான அடித்தளத்தை அமைத்தன.

**1757 ஆம் ஆண்டு நடந்த பிளாசி போர்** (Battle of Plassey) பிறகு வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆட்சி விரிவடைந்தது. இந்த காலம் புராட்டஸ்டண்ட் மிஷனரிகள் மொழிபெயர்ப்பு மற்றும் கல்வி பணிகளில் ஈடுபட புதிய வாய்ப்புகளை உருவாக்கியது.

### வில்லியம் கேரி மற்றும் வங்காள வேதாகமம்

வங்காள வேதாகமத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமான நபர் **வில்லியம் கேரி (William Carey)** ஆவார். அவரை பொதுவாக **“நவீன மிஷன் இயக்கத்தின் தந்தை”** என்று அழைக்கின்றனர்.

**1793 ஆம் ஆண்டு** அவர் இந்தியாவுக்கு வந்தார். மக்கள் தங்கள் தாய்மொழியில் வேதாகமத்தை வாசிக்க வேண்டும் என்ற ஆழமான விருப்பம் அவருக்கு இருந்தது. வங்காள மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை கற்றுக்கொண்டு விரைவில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் தொடங்கினார்.

பல ஆண்டுகளாக மேற்கொண்ட உழைப்பின் விளைவாக 1801 ஆம் ஆண்டு வங்காள **புதிய ஏற்பாடு** வெளியிடப்பட்டது. அதன் பின்னர் அவர் மொழிபெயர்ப்பு பணியைத் தொடர்ந்து **1809 ஆம் ஆண்டு பழைய ஏற்பாட்டையும்** நிறைவு செய்து, முதல் முழுமையான **வங்காள வேதாகமத்தை** வெளியிட்டார்.

இந்தப் பெரிய பணியை நிறைவேற்ற **சுமார் பதினாறு ஆண்டுகள்** கடுமையான உழைப்பு தேவைப்பட்டது. கேரி **செராம்பூர் மிஷனில்** (Serampore Mission) உள்ளூர் அறிஞர்களும் மிஷனரிகளும் சேர்ந்து பணியாற்றினார். அங்கு இருந்த அச்சுக் கருவிகள் மூலம் வேதாகமம் அச்சிட்டு பரவலாக விநியோகிக்கப்பட்டது.

கேரி இந்தியாவில் சுமார் **நாற்பது ஆண்டுகள்** பணியாற்றினார். அவர் **1834 ஆம் ஆண்டு** இறந்தார். தனது வாழ்க்கையில் பல மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்தும், மேலும் பல மொழிகளில் மொழிபெயர்ப்பு பணிகளை ஆரம்பித்தும் அவர் பெரும் பங்களிப்பு செய்தார்.

### வங்காள வேதாகமத்திற்கு பங்களித்த மற்றவர்கள்

வில்லியம் கேரி இந்தப் பணியில் முக்கிய பங்கு வகித்தாலும், அவர் ஒருவரே இதைச் செய்தவர் அல்ல. பல சக ஊழியர்களும் அறிஞர்களும் மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுப் பணிகளில் அவருக்கு உதவினர்.

அவர்களில் முக்கியமானவர்கள் **ஜோஷுவா மார்ஷ்மன்** (Joshua Marshman) மற்றும் வில்லியம் வார்டு (William Ward) ஆவர். இவர்கள் **“செராம்பூர் மூவர்”** (Serampore Trio) என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் கூட்டு முயற்சி தென் ஆசியாவில் வேதாகம மொழிபெயர்ப்பு மற்றும் வெளியீட்டிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது.

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்

பின்னர் பல அறிஞர்கள் வங்காள வேதாகமத்தை திருத்தி மேம்படுத்தும் பணியைத் தொடர்ந்தனர். அவர்களில் **வில்லியம் யேட்ஸ்** (William Yates) குறிப்பிடத்தக்கவர். அவர் **1845 ஆம் ஆண்டு** திருத்தப்பட்ட வங்காள மொழிபெயர்ப்பை வெளியிட்டார்.

இந்த தொடர்ந்து நடந்த முயற்சிகள் மூலம் வங்காள வேதாகமம் மேலும் தெளிவாகவும் துல்லியமாகவும் வாசகர்களுக்கு எளிதாக புரியும் வகையிலும் மாறியது.

### சமகால வங்காள வேதாகம பதிப்புகள்

காலப்போக்கில் பல்வேறு வாசகர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய பல வங்காள வேதாகம பதிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில:

- கேரி பதிப்பு (Carey Version)
- செராம்பூர் பதிப்பு (Serampore Version)
- கல்கத்தா பைபிள் சோசைட்டி பதிப்பு
- எளிய மொழி பதிப்பு (Common Language Version)
- எளிதாக வாசிக்கக்கூடிய பதிப்பு (Easy-to-Read Version)
- சமகால வங்காள வேதாகமம் (Contemporary Bengali Bible)

இந்த மொழிபெயர்ப்புகள் அனைத்தும் தேவனுடைய வார்த்தையை வாசகர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் மொழியில் வழங்க முயற்சி செய்கின்றன.

ஆனால் மொழி காலப்போக்கில் மாறிக்கொண்டே இருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன் எளிதாகப் புரிந்த வார்த்தைகள் இன்று புதிதாகத் தோன்றலாம். இதனால் வேதாகமத்தை திருத்தி புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதங்கள் எழுகின்றன.

### இன்றைய சவால்கள்

இன்றைய காலத்தில் வங்காள மொழி பேசும் இளைஞர்களில் பலர் வங்காள மொழிக்கு பதிலாக **ஆங்கில வேதாகமத்தை** வாசிக்க விரும்புகின்றனர். ஆங்கில மொழிபெயர்ப்புகள் உலகளாவிய ஆய்வுகளையும் வளங்களையும் அணுக உதவினாலும், இது சில சமயங்களில் தாய்மொழியுடனான ஆன்மீக தொடர்பை குறைக்கக்கூடும்.

எனவே, குறிப்பாக இளைஞர்கள் **வங்காள மொழியில் வேதாகமத்தை வாசிக்க ஊக்குவிப்பது** தேவாலயங்களுக்கும் ஊழியங்களுக்கும் முக்கிய சவாலாக உள்ளது.

### இதற்காக நடைமுறை முயற்சிகளாக:

- வேதாகம வாசிப்பு திட்டங்களை ஊக்குவித்தல்
- ஆய்வு குழுக்களை அமைத்தல்
- வங்காள மொழியில் கிறிஸ்தவ இலக்கியங்களை வெளியிடுதல்
- டிஜிட்டல் வேதாகம வளங்களை உருவாக்குதல்

போன்ற செயல்களை மேற்கொள்ளலாம்.

### முடிவுரை

இன்று **வங்காள வேதாகமம்** ஒரு மதிப்புமிக்க ஆன்மீகச் செல்வமாகத் திகழ்கிறது. விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை வாசித்து அதன்படி வாழும்போது, பல நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கிய இந்த வளமான மரபில் அவர்கள் பங்கேற்கிறார்கள்.

வேதாகமம் **வெளிப்படுத்தின விசேஷம் 1:3-ல்**, “இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை வாசிப்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்” என்று கூறுகிறது. அதேபோல் **லூக்கா 11:28-ல்,** “தேவனுடைய வார்த்தையை கேட்டு அதை கைக்கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்” என்று சொல்லப்படுகிறது.

தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ளங்களை ஒளியூட்டியும் விசுவாசிகளை வழிநடத்தியும் தொடரட்டும்.

**-பாஸ்டர். Danis Chakraborty, பங்களாதேஷ்.**

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் வேதாகமங்களைப் புறக்கணிப்பது, இயேசுவின் மீது உள்ள விசுவாசமின்மையினால் அல்ல. மாறாக வேதாகமத்தை படிக்க நேரத்தையும், இடத்தையும், வழிமுறைகளையும் திட்டமிடுவதில் தோல்வியடைவதால் ஆகும். - ஜான் பைபர்

## சாட்சி - சகோதரி. ஜான்சி ராணி. -மறைமலை நகர்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

தேவனுக்கே மகிமை உண்டாவதாக! என் பெயர் ஜான்சி ராணி. நான் மறைமலை நகரில் வசித்து வருகிறேன். நானும் என் குடும்பமும் 2010 ஆம் வருடத்தில் இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றோம்.

**நீங்கள் இதுவரை முழு பைபிளையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

ஒரு வருடத்தில் முதலில் வாசித்து முடித்தேன். பிறகு 6 மாதம், மூன்று மாதங்கள் பிரிவுகளில் பலமுறை வேதத்தை வாசித்து முடிக்க தேவன் கிருபை பாராட்டினார். கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை, மே முதல் ஜூலை வரை 3 மாதம் பிரிவு, ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் முதல் மீண்டும் 3 மாதங்கள் பிரிவுகளில் வேதத்தை வாசித்து முடித்தேன்.

**GODependence திட்டத்தின் மூலம் வேதாகமம் வாசிக்க எப்படி ஆர்வமாக இருந்தது?**

டிசம்பர் மாதம் வேதம் வாசிக்க விடுமுறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினேன் ஆனால் ஆவியானவர் தூண்டுதல் காரணமாக ஒரு மாதம் பிரிவில் இணைந்து வாசிக்க தேவன் கிருபை பாராட்டினார்.

**GODependence குழுவின் முறை உங்களுக்கு எவ்வாறு உதவியது?**

வேதத்தை வாசித்து முடிக்க இக்குழுவில் இணைந்தது முதல் மிகவும் ஆசிர்வாதமாக இருக்கிறது.

**இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வேதத்தை ஒவ்வொரு முறை வாசிக்கும் போது புதுமையாக இருக்கும். தேவன் தேற்றுவார், கண்டிப்பார், ஆசிர்வதிப்பார், குணமாக்குவார், பாதுகாப்பார். வேதத்தை இதுவரை 25 முறைக்கு மேலாக வாசித்து முடிக்க தேவன் கிருபை பாராட்டினார். **தேவனுக்கும் இக்குழுவை வழிநடத்தும் அனைவருக்கும் மிகவும் நன்றி செலுத்துகிறேன்.**

# சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2025-26

## மனன வசனப் போட்டி - பருவம் 2

2025-26 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2026 பிப்ரவரி மாத இறுதியுடன் நிறைவு பெற்றன. பருவம் 2 க்கான மனன வசனப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களின் வீடியோக்கள் நமது Youtube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பருவம் 3 க்கான மனன வசனப் போட்டிகள் மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளன.


CLICK HERE
Ajoy Steven



CLICK HERE
C V Joanna Jessica


CLICK HERE
R Lakeesha


CLICK HERE
J. J.Jerolin Esther Margaret


CLICK HERE
A. Anisha Singh


CLICK HERE
M Esther


CLICK HERE
M Jerson Jebaraj


CLICK HERE
James Santhosh

## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் வாசகர் வாய்ஸ் பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம். +965 6596 2559

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

## GODependence நிகழ்வுகள்

### தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) - 28.03.2026 மலையாள மொழியில்

1




25 பிப்ரவரி 2025 அன்று மலையாள மொழியில் நடத்த திட்டமிடப்பட்ட தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் அன்று நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக 28 பிப்ரவரி 2026 அன்று **தமிழ் மொழியில்** 6 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த மாதத்திற்கான Bible Readathon 28 மார்ச் 2026 அன்று மாலை இந்திய நேரம் 6 மணி முதல் 10 மணி வரை **மலையாள மொழியில்** நடைபெற உள்ளது.

நல்ல இணைய (Internet) வசதியும் மலையாள மொழியில் சரளமாக வேதாகமம் வாசிப்பவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

2




### GODependence கருத்தரங்கு - மார்ச் 2026

**தலைப்பு:** கிறிஸ்துவின் சிலுவை மரணம் - ஒரு மருத்துவப் பார்வை

(இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பாடு மரணம் குறித்து நமக்குள் எழும் / மற்றவர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பதில்களை ஒரு கிறிஸ்தவ மருத்துவருடன் கலந்துரையாடி அறிந்துகொள்ளும் நேரலை நிகழ்வு)

**நாள்:** 29 மார்ச் 2026 ஞாயிறு இந்திய நேரம் மாலை 4:00 முதல் 5:00 மணி வரை


**கருத்துரை:** Dr. பேதுரு தேவதாசன், குவைத்.

### வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள்

3

**மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், இதுவரையும் தொடங்கப்படவில்லை.**

வேத தியானக் குழுக்களில் இணைய விரும்புபவர்களுக்காக "தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது எப்படி" என்ற தலைப்பில் பயிற்சி நிகழவுகள் திட்டமிடப்பட்டு நடைபெற வேண்டும். ரமலான் மற்றும் லெந்து கால வேதவாசிப்பு சவால்கள் நிறைவடைந்த பின்னர், இந்த நடவடிக்கைகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.



FOLLOW US!

GODependence **வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Website)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் கான்ட்